# திருவரங்கம்

V. திருமலை ஐயங்கார்–கார்யதர்சி–ஸ்ரீரங்கம் வேதபாராயண ஸம்ரக்ஷண ஸபா

எம்பெருமானார் தரிசனமென்றே இதற்கு
நம்பெருமாள் பேரிட்டு நாட்டிவைத்தார்—அம்புவியோர்
இந்தத் தரிசனத்தை எம்பெருமானார் வளர்த்த
அந்தச் செயலறிகைக்கா.

ஆழ்வார் அருளிச்செயலில் ஈடுபட்டிருக்கும் எம்பெருமானார் தர்சனஸ்தர்களான அகில பாகவதோத்தமர்களுக்கும் கோயில் நம்பெருமாள் (ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாதஸ்வாமி வகையறா) தேவஸ்தானம் ஏகதேச மிராஸ் அத்யாபக வேத பாராயண கோஷ்டி கைங்கர்யத்தை நம் முன்னோர்கள் நடத்திவந்தபடியே இப்பொழுதும் நடந்து வருகிற க்ரமம் (அனுஷ்டானம்) விண்ணப்பிக்கப்படுகிறது.

திருவரங்கன் மலரடிக்காளுற்றவராகிய அன்பர்களுக்கு ஓர் அரிய பெரிய விருந்தாகும் இந்தக் கோயில் அத்யாபக கோஷ்டியின் அருளிச்செயல் சேவாகாலம்.

இப் பரதகண்டத்தில் ஆஸேது ஹிமாசலமுள்ள திவ்ய தேசங்களில் திசை விளக்காய் நிற்கும் திருவரங்கம் திருப்பதியானது எம்பாருமுய்ய ஆழ்வார்கள் பதின்மர்களாலும் மங்களாசாஸநம் செய்யப்பெற்று உத்ஸவாதிகளில் ஸம்ஸ்க்ருத திராவிடாகம ஸித்த வைதிக லௌகிக கிரியா கலாபங்களையுடையதென்பதும் எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

இது நாளதுவரையில் தென்னாசார்ய ஸம்ப்ரதாய ப்ரகாரமே நடந்துவருகிற இதன் பெருமையை யாவருமறிந்துளர்.

"அடியார்கள் குழாங்களை உடன் கூடுவதென்றுகொலோ" என்றும், "அணியரங்கன் திருமுற்றத்து அடியார் தங்கள் இன்பமிகு பெருங்குழுவு கண்டு யானு மிசைந்து உடனேயென்றுகொலோ இருக்கும் நாளே" என்றும், "பூதம் பேய் கோதை குலமுனிவன் கூறிய நூலோதி வீதிவாழ்யெனவரும் திரளை வாழ்த்து வார்தம் மலரடி யென்சென்னிக்கு மலர்ந்த பூவே" என்றும் பெரியோர்களால் ஆசைப்பட்டுக் கொண்டாடும்படியான பெருமையையுடைய இந்த அத்யாபக கோஷ்டிக்கு ஆழ்வார் என்று திருநாமம்.

மேற்படி கோஷ்டியிலுள்ள ஸ்வாமிகள் எல்லோரும் (1) பிள்ளைலோகாசாரியார் திருவீதி, (2) கிழக்கு மாடத்திருவீதி, (3) தெற்கு மாடத்திருவீதி, (4) மேற்கு மாடத் திருவீதி, (5) வடக்கு மாடத் திருவீதி, (6) உள்கிழக்கு மாடத் திருவீதி என்கிற ஆறு திருவீதிக் கிரமத்தில் சேர்ந்திருப்பார்கள்,

இவர்களில் நாலாயிர அத்யாபகர்கள், மூவாயிர அத்யாபகர்கள், இரண்டாயிர அத்யாபகர்கள், ஓர் ஆயிர அத்யாபகர்கள், கோயில் திருவாய்மொழி அத்யாபகர்கள் என்பதாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பார்கள். மேற்படி ஆறு வீதிக்கும் நாலாயிர அத்யாபக ஸ்வாமிகளில் ஒவ்வொருவர் தலைவராக விருப்பார். மேற்படி ஆறு தலைவர்களில் வயது க்ரமம், சாத்துமுறை க்ரமம், பரம்பரை க்ரமம், கோஷ்டி சமய சம்ப்ரதாயங்களையெல்லாம் தெரிந்த மூன்றுபேர்களைத் தேர்ந்தெடுத்து அவர்

களுள் ஒருவர் சாது ஸ்ரீ வைஷ்ணவர், மற்ற இருவர் பக்கத்து சாது ஸ்ரீவைஷ்ணவர்கள். இந்த மூன்று பேர்களையும் எல்லா அத்யாபகர்களும் ஆமோதித்து அதைத் தேவஸ்தானத்திற்குத் தெரியப்படுத்தி தேவஸ்தானத்தார் அங்கீகாரமும் பெறப்படும். அப்படி தேவஸ்தான அங்கீகாரம்பெற்ற சாது ஸ்ரீவைஷ்ணவர் கோஷ்டித் தலைவராகவுமிருப்பார்.

மேற்படி கோஷ்டியிலுள்ள ஸ்வாமிகள் எல்லோருக்கும் பொதுவான பிரதிநிதியான சாது ஸ்ரீவைஷ்ணவர் பெரிய சந்நிதி முதலாக எல்லாச் சந்நிதிகளிலும், மண்டபங்களிலும், தீர்த்தம், ஸ்ரீசடாரி, அருளப்பாடு, அரிவாணம், பாவாடை முதலான யாவகை ப்ரஸாத விநியோகங்களையும் ஆழ்வார் ஸ்தானம் ஸ்தம்பங்களில் இருந்துகொண்டு மேற்படி மரியாதைகளை அடைந்துவருகிறது ஸம்ப்ரதாயம். சாது ஸ்ரீவைஷ்ணவர் இல்லாத சமயங்களில் பக்கத்து சாது ஸ்ரீவைஷ்ணவர் அந்த மரியாதையைப் பெற்றுக்கொள்ளுவர். அப்படி அவரும் இல்லாத சமயங்களில் அத்யாபக கோஷ்டியைச்சேர்ந்தவர்களில் வயது க்ரமத்தை அனுசரித்து ஒரு அத்யாபகர் சாது ஸ்ரீவைஷ்ணவருக்குப் பதிலாக அந்த மரியாதையைப் பெற்றுக்கொள்ளுவர். சாது ஸ்ரீவைஷ்ணவர் ஸ்தானத்தில் யாருமில்லாமல் கோஷ்டி எதுவும் நடைபெறாது. இன்றும் அப்படியே நடந்து வருகிறது.

இந்த ஆழ்வார் என்கிற அத்யாபக கோஷ்டியில் சேர்ந்து உஜ்ஜீவிக்க ஆசையுடைய தென்னாசார்ய சம்ப்ரதாய ஸ்ரீவைஷ்ணவர்கள் கோஷ்டித் தலைவர்களிடம் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவித்துக்கொண்டால் கோஷ்டித் தலைவர்கள் அப்போதைய கோஷ்டி நிலைமையை அனுசரித்தும், அபிப்பிராயப்படுகிற ஸ்ரீவைஷ்ணவரின் தன்மையை அனுசரித்தும், மற்றும் கோஷ்டியின் நலனை அனுசரித்தும் முடிவுசெய்து தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிப்பார்கள். அதன் பிறகு அதுமாதிரி கோஷ்டியில் சேருவதற்கு அபிப்பிராயப்படுகிற எல்லா ஸ்வாமிகளையும் ஒன்று சேர்த்து ஒரே சமயத்தில் கோஷ்டியில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். அப்படிச் சேர்த்துக் கொண்ட பிறகு மேற்படி ஸ்வாமிகளும் கோஷ்டி வரம்பை மீறாமலும், பழக்க வழக்கத்தை அனுசரித்தும், தலைவர்கள் அபிப்பிராயத்தை அனுசரித்தும் நடந்து வரவேணும். முதல் முதலாக, கோயில் திருவாய்மொழி அத்யாபகம் சாத்தப்படும். அதற்குக் கட்டக்காணிக்கையாக ரூ.16-37 வாங்கப்படும். கோயில் திருவாய்மொழி அத்யாபகத்துக்குப் பரீக்ஷை கிடையாது. கோயில் திருவாய்மொழி அத்யாபகத்திலிருந்து திருவாய்மொழி ஆயிரம், முதலாயிரம், பெரிய திருமொழி, இயற்பா இப்படி ஒவ்வொரு ஆயிரத்துக்கும் சேர விரும்பும் ஸ்வாமிகளிடமிருந்து மேலே கண்ட வரம்புக்கு உள்பட்டு பரீக்ஷை செய்து அதற்குண்டான கட்டக் காணிக்கையைப் பெற்றுக்கொண்டு கோஷ்டியில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். ஒரே சமயத்திலும் நாலாயிரமும் பரீக்ஷை கொடுத்து அதற்குண்டான கட்டக் காணிக்கையையும் செலுத்தினால் மேலே கண்ட வரம்புக்கு உட்பட்டுக் கோஷ்டியில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். எந்த ஸ்வாமியையும் கோஷ்டியில் சேர்த்துக் கொள்ளுவதென்பது அப்போதைய கோஷ்டியின் நிலைமை, கோஷ்டியில் சேருவதற்கு அபிப்பிராயப்படும் ஸ்வாமியின் தன்மை, மற்றும் கோஷ்டியின் நலன், பழக்கவழக்கங்கள் முதலியவைகளை அனுசரித்து முன்னோர்கள் நடந்துகொண்டு வந்தபடியே சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

கோஷ்டி சம்பந்தமாய் தலைவர் சாது ஸ்ரீவைஷ்ணவரும், பக்கத்து சாது ஸ்ரீ வைஷ்ணவர்களும், மற்றும் நாலாயிர

அத்யாபகர்களும் பழக்க வழக்கத்தை அனுசரித்துச் செய்யும் சட்டதிட்டங்களுக்கு மற்றைய அத்யாபகர்கள் கட்டுப்பட்டு நடக்கவேண்டும். இப்படியே ப்ராசீனமாக நடந்து வருகிறது. புதிதாக ஆயிரம் முதலாக நாலாயிரம்வரை சாத்தும் அத்யாபகர்கள் முன் பெரியவர்கள் சேவித்து வந்த சேவாகால சாயையை அனுசரித்து நீட்டுதல், குறுக்குதல், இரட்டித்தல், நிறுத்தல், தொடக்கம், சாற்றுமுறை முதலிய எல்லா க்ரமங்களையும் நன்குகப் பார்த்தும், கேட்டும், சேவித்தும் வரவேண்டியது. தாமாக எதையும் புதிதாக ஆரம்பிக்கக்கூடாது.

பெருமாள் சந்நிதி பகல்பத்து, இராப்பத்து உத்ஸவத்தில் அரையர் சேவை முடிந்து வாழி மங்களம் முடிந்தவுடன் மண்டபத்திற்குப்போய் எல்லா அத்யாபக ஸ்வாமிகளும் சாது ஸ்ரீவைஷ்ணவர் தலைமையில் ஸ்ரீசடகோபம், தீர்த்தம் மரியாதை பெற்றுக்கொள்ளுவது வழக்கம். இன்றும் அப்படியே நடந்து வருகிறது.

தாயார் சந்நிதி பகல், இராப்பத்து உத்ஸவத்தில் அரையருக்கு அருளப்பாடு ஆனவுடன் சாது ஸ்ரீவைஷ்ணவர் "சாதித்தருள" என்று சொன்னவுடன் எல்லா அத்யாபக ஸ்வாமிகளும் ஸ்ரீசைலேசதயாபாத்ரம் தொடங்கித் தனியன்களைச் சேவிப்பதும் பிறகு பாசுரங்கள் சேவை முடிந்தவுடன் கோஷ்டி ஸ்வாமிகள் உத்தரசாத்தி தொடங்கி "மணவாள மாமுனியே இன்னுமொரு நூற்றாண்டிரும்" என்று சாற்றுமுறை முடிந்தவுடன் சாது ஸ்ரீவைஷ்ணவர் தொடங்கி எல்லா அத்யாபகர்களும் ஸ்ரீசடகோபம் தீர்த்தம் மரியாதை பெற்றுக்கொள்ளும் வழக்கம் இன்றும் நடந்து வருகிறது.

தை, மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி இந்த உத்ஸவங்களில் முதல் திருநாள் தொடங்கி ஆறாந்திருநாள் வரையில் திருவீதியில் இரண்டு வேளைகளிலும் அந்தாதி சேவிக்கிறதும், ஏழாந்திருநா[ள்] திருச்சந்தவிருத்தம் சேவிக்கிறதும், எ[ட்] டாந் திருநாள் காலையில் திருமொழி தெ[ா] டங்கிக் காலையில் இயல் சாற்றில்நின்ற தி[ரு]மொழியைவிட்டுச் சாயங்காலம் அடுத்[த] திருமொழிதொடங்கிச் சேவிக்கிறதும், ம[று] நாள் திருத்தேருக்கு எழுந்தருளும்போ[து] திருமடல் சேவிக்கிறதும், திருத்தே[ர்] தட்டுக்கருகில் மண்டபத்தில் சாற்[று]முறையில் ஸ்ரீசடகோபம் மரியா[தை] பெற்றுக்கொள்ளுவதும், உடனேயே தி[ரு]மொழி தொடங்கித் திருத்தேர்த் திருவீ[தி] எழுந்தருளும்போது சேவித்துக்கொண்[டு] வந்து, நிலை சேர்ந்தவுடன் தேரடியி[ல்] திருமொழி சாற்றுமுறையானவுடன் திரு[க்] குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டக[ம்] தொடங்கியவுடன் ஸ்தானிகாள் சா[த்] துப்படி தீர்த்தம் எழுந்தருளப்பண்ணி[க்] கொண்டுவந்து சாது ஸ்ரீவைஷ்ணவ[ர்] தொடங்கி எ[ல்லா] அத்யாபகர்களுக்கு[ம்] சாத்துப்படி, தீர்த்தம் மரியாதை ந[ட]பெறுகிறதும் வழக்கமாகவிருந்து வ[ரு]கிறது. திருத்தேரிலிருந்து உள்ளே எழு[ந்]தருளும்போது, திருநெடுந்தாண்டக[ம்] சேவித்துச் சாற்றுமுறை செய்து சடா[ரி] மரியாதை பெற்றுக்கொள்ளுவது[ம்] வழக்கமாயிருந்து வருகிறது. தெப்ப[ம்] பந்தக்காக்ஷி உத்ஸவத்தில் திருத்தேர[டி]யில் நடப்பதுபோல மேற்ப[டி] மண்டபத்திற்குப் பக்கத்தில் மேற்ப[டி] மரியாதையைப் பெற்றுக்கொள்ளுவ[து] வழக்கம். தெப்போத்ஸவம் எட்டா[ந்] திருநாள் தெப்பத்துக்கு எழுந்தருளு[ம்] போது திருமடல் சேவிப்ப[து] திரும்பி எழுந்தருளும்போது திருக்குறு[ந்] தாண்டகம், திருநெடுந்தாண்டகம் சேவி[த்]துச் சாற்றுமுறை செய்து ஸ்ரீசடாரி ம[ரி]யாதை பெற்றுக்கொள்ளுவதும் வழக்[க]மாகவிருக்கிறது. சப்தாவரண உத்ஸவ[ங்]களிலும், பந்தக்காக்ஷி உத்ஸவத்திலு[ம்] வைகாசி வஸந்தம் ஒன்பதாம் உத்ஸவ[த்]திலும் இராமாநுஜ நூற்றந்தாதி திருவீ[தி]

யில் சேவித்துச் சாற்றுமுறை செய்து ஸ்ரீசடாரி மரியாதை பெற்றுக்கொள்ளுவது வழக்கம்.

பெருமாள் ஸப்தபிரகாரத்துக்கு வெளியில் எழுந்தருளும் உத்ஸவங்களில் கடைசி கோபுர வாசலுக்கு உள்புறத்திலேயே இயல் சாற்றுமுறை ஸ்ரீசடகோபம் மரியாதை பெற்றுக்கொள்ளுகிறதும், திருவீதிக்குள் எழுந்தருளும் உத்ஸவங்களில் கோயில் மண்டபங்களில் சாற்றுமுறை ஸ்ரீசடகோபம் மரியாதை பெற்றுக்கொள்ளுகிறதும், ராத்திரி உள்ளே எழுந்தருளும்போது திருக்கார்த்திகை கோபுர வாசலில் இயல் சாற்றுமுறையில் ஸ்ரீசடகோபம் மரியாதை பெற்றுக்கொள்ளுகிறதும், ஆழ்வார் சந்நிதி இயல் சாற்றில் மதுரகவி மரியாதை பெற்றுக்கொள்ளுவதும், கோஷ்டியாருக்கு ஏகதேசபாத்தியமாகவிருந்து வருகிறது. பங்குனி உத்திரத்தில் சின்னப் பெருமாள் காவேரியில் ராத்திரி தீர்த்தம் சாதித்துவந்தவுடன் நம்பெருமாள், ஸ்ரீரங்கநாச்சியார் சேர்த்தியில் எழுந்தருளியிருக்கும்போது திரை வாங்கியவுடன் சாது ஸ்ரீவைஷ்ணவர் "சாதித்தருள" என்று சொன்னவுடன் ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தொடங்கி கத்யத்ரயம் அத்யாபக கோஷ்டியாரால் சேவிக்கிறதும், முடிந்தவுடன் தளிகை அமுது செய்த பிறகு பெருமாள், தாயார் சேர்த்திக்குப் பக்கத்தில் போய் பெரிய பெருமாள், பெரிய பிராட்டியார் வாழித் திருநாமத்துடன் சாற்றுமுறை செய்வதும் பிறகு தீர்த்தம், ஸ்ரீசடகோபம் மரியாதை பெற்றுக்கொள்ளுவதும் கோஷ்டியாருக்கு ஏற்பட்ட ஏகதேசமரியாதையாகவிருந்து வருகிறது.

நம்பெருமாள் பகல், இராப்பத்து, ஸம்வத்ஸராதி, தீபாவளி, சங்கராந்தி, கனு ஆகிய உத்ஸவங்களில் ஆழ்வார், ஆசார்யர்களுக்கு மரியாதை நடந்து, திரும்பி அவரவர்கள் சந்நிதிக்கு எழுந்தருளும்போது ஸ்தோத்ரபாட கோஷ்டி கருட மண்டபத்தில் ஆரம்பித்துப் பராங்குச பஞ்சவிம்சதி, நக்ஷத்ர மாலிகா, ஸ்தோத்ர ரத்னம், யதிராஜவிம்சதி முதலிய ஸ்தோத்ரங்கள் சேவிப்பதும், நம்மாழ்வார் சந்நிதியில் ஆழ்வார் ஆசார்யர்களுக்கு மரியாதை ஆனவுடன் கோஷ்டியார் மதுரகவி பெற்றுக்கொள்ளுவதும், எம்பெருமானார் சந்நிதியில் ஸ்தோத்ரபாட சாற்று முறையை முடித்துத் தீர்த்தம், முதலியாண்டான் பெற்றுக்கொள்ளுவதும் வழக்கமாகவிருந்து வருகிறது. இராப்பத்து உத்ஸவத்தில் மணல் வெளியில் நம்மாழ்வார், திருமங்கை மன்னன், எம்பெருமானார் எழுந்தருளியவுடன் ஸ்ரீரங்கராஜஸ்தவ கோஷ்டியை ஆரம்பித்து, பெருமாள் ஆழ்வாருக்குப் பக்கத்தில் எழுந்தருளியவுடன் சாற்றுமுறை செய்வதும் வழக்கமாயிருக்கிறது.

பெரிய கோயில், மற்றும் எல்லாச் சந்நிதிகளிலும் நடக்கும் எல்லாச் சம்ப்ரோக்ஷண காலங்களிலும், அத்யாபகர்கள் யாகசாலையில் அருளிச்செயல் கோஷ்டி தொடங்கிச் சேவாகாலம் செய்து சம்ப்ரோக்ஷண முடிந்தவுடன் பெரிய பெருமாள் மற்றும், அந்தந்தக் கோயில் கர்ப்பகிரஹங்களுக்கு முன்பாக வாழி திருநாமத்துடன் சாற்றுமுறை செய்வதும், அதற்குண்டான மரியாதை வருமானங்களைப் பெற்றுவருவதும் வழக்கமாகவிருக்கிறது.

பெரிய கோயிலில் நடக்கும் தை, மாசி, பங்குனி, சித்திரை ஆகிய உத்ஸவங்களிலும், தாயார் சந்நிதி பகல், இராப்பத்து உத்ஸவங்களிலும், திருத்தேர் உத்ஸவங்களிலும் தேவஸ்தானத்தாரால் கொடுக்கும் தோசை, ப்ரஸாதம் ரொக்கம் வகையறுக்களை சாது ஸ்ரீவைஷ்ணவர் வாங்கி அத்யாபகர்களுக்கு வழக்கம்போல் பிரித்துக் கொடுப்பதும் வழக்கமாகவிருக்கிறது.

இதேபோல் ஆழ்வார், ஆசார்யாள் சந்நிதிகளிலும், ஸ்தலத்தார் திருமாளிகைகளிலும், மடம் முதலான இடங்களிலும் பெரிய சந்நிதியிலிருந்து போகும் அலங்காரம் மரியாதை கோஷ்டிகளிலும், மற்றும் மாதாந்தரத் திருநக்ஷத்திரம், வருஷ திருநக்ஷத்திர உத்ஸவங்களிலும் நடக்கும் அருளிச்செயல் கோஷ்டியில் சாது ஸ்ரீவைஷ்ணவர் "சாதித்தருள" என்று சொன்னவுடன் கோஷ்டியார் ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தொடங்கிப் பாசுரங்களைச் சேவித்து உத்தரசாந்தியுடன் "மணவாள மாமுனிபே இன்னுமொரு நூற்றாண்டிரும்" என்று சாற்றுமுறை செய்வதும் தீர்த்தம் ஸ்ரீசடகோபம் பிரஸாதம், மரியாதை பெற்றுக்கொள்ளுவதும் வழக்கமாகவிருக்கிறது.

மேலும் மேற்படி ஆழ்வார், ஆசார்யாள் சந்நிதிகள், ஸ்தலத்தார் திருமாளிகைகள், மடம் முதலான எல்லா இடங்களிலும் தீர்த்தம், சடாரி, பிரஸாத விநியோகங்கள் செய்வதும் அத்யாபகர்களுடைய மிராஸ் பாத்யமாகவிருந்து வருகிறது.

உறையூர் கமலவல்லித் தாயார் சந்நிதியிலும் மற்றும் அங்குள்ள ஆழ்வார், ஆசார்யாள் சந்நிதிகளிலும், ஸ்ரீரங்கம் கோவில் அத்யாபக கோஷ்டியார்களே போய் பகல், இராப்பத்து உத்ஸவங்களில் அரையருக்கு அருளிப்பாடு ஆனவுடன் சாது ஸ்ரீவைஷ்ணவர் "சாதித்தருள" என்று சொன்னவுடன் ஸ்ரீசைலேசதயாபாத்ரம் தொடங்கிப் பாசுரங்களைச் சேவித்து உத்தரசாந்தியுடன் சாற்றுமுறை வழக்கம்போல் செய்வதும், தீர்த்தம், ஸ்ரீசடகோபம், பிரஸாதம், தோசை வகையறா மரியாதைகளைப் பெற்றுக்கொள்ளுவதும் அத்யாபகர்களுடைய பாத்யமாகவிருந்து வருகிறது. இயற்பா மட்டும் அத்யாபக கோஷ்டியார் ஏகதேசமாக சேவிக்கிற பாத்யமும் இருந்து வருகிறது.

திருப்பாணாழ்வார் வருஷ திருநக்ஷத்திர உத்ஸவத்திலும் அத்யாபக கோஷ்டியார் போய்ப் பத்துநாள் உத்ஸவம் சேவாகாலம் செய்து மரியாதை ப்ரஸாதங்கள் பெற்றுக்கொள்ளுவர்.

இன்னும் பெருமாள் சந்நிதியிலும் மற்றும் இதர சந்நிதிகளிலும், ஆழ்வார் ஆசார்யாள் சந்நிதிகளிலும் அத்யாபக கோஷ்டியாருக்கு ஏற்பட்டிருக்கும் கைங்கர்யங்களும், மரியாதைகளும் பல இருந்தபோதிலும் விரிவுக்கஞ்சி முக்யமானவைகளை மட்டும் தெரிவிக்கலாயிற்று.

ஏற்கனவே பெரியோர்களால் சாவதாரி ஷு ஆவணி மீ 23உக்கு 1828 ஷு செப்டம்பர் 5உ எழுதிவைக்கப்பட்டிருக்கும் அத்யாபக கோஷ்டி சட்டதிட்ட விதிகள் அடங்கிய புத்தகத்திலிருந்தும் (மேற்படி புத்தகம் கோர்ட்டுகளில் தாக்கலாகி வாபஸ் பெறப்பட்டிருக்கிறது) தற்காலம் அனுஷ்டானத்தில் இருந்து வருவதையும் அனுசரித்து விண்ணப்பிக்கப்பட்டிருக்கிறது.

வேதபாராயண கோஷ்டி கைங்கர்ய விபரம்

நித்தியப்படி பெரிய பெருமாள் திருவாராதனம், மற்றும் திருப்பவித்ரோத்ஸவ திருவாராதனம், நம்பெருமாள் புறப்பாடு, எல்லாவித ஸம்ப்ரோக்ஷணைகள் முதலிய எல்லாச் சமயங்களிலும் தென்னாசாரிய சம்பிரதாய ஸ்ரீவைஷ்ணவ வேத பாராயண கோஷ்டியாரைத்தவிர வேறு யாருக்கும் வேத பாராயணம் செய்ய பாத்தியம் கிடையாது. இந்தக் கோஷ்டியார்தாம் இந்தத் தேவஸ்தானத்தின் ஏகதேச வேத பாராயண கோஷ்டி பிராசுதாரராகக் கைங்கர்யம் செய்து வருகிறார்கள்.